KTEJ 2025 02 (2): 66- 84

Kolumpu Tamil E-Journal (KTEJ)

Volume 02, Issue II, 2025

# பெண் தொழில்முனைவோரைத் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தால் வலுப்படுத்தல்: இலங்கை யாழ்ப்பாணத்தில் மிலேனியம் அபிவிருத்தி இலக்கை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

# Empowering Women Entrepreneurs through Information and Communication Technology: A Millennium Development Goal-based Study in Jaffna - Sri Lanka

ஜனனீ தேவானந்த்

நிதி முகாமைத்துவத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

jananit@univ.jfn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் நோக்கமானது வட இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் தொழில்முனைவோரை வலுப்படுத்துவதில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் (ICT) பங்கு எவ்வாறு காணப்படுகிறது என்பதை ஆராய்வதாகும். இவ்வாய்வின் அடிப்படைக்கோட்பாடு மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு-3 (MDG 3) அடிப்படையாகக் கொண்டதாகும். அதாவது "பெண்களை வலுப்படுத்திப் பாலின பால்நிலைச் சமநிலையை மேம்படுத்துதல்." அளவுசார் (Quantitative) அணுகுமுறையின் கீழ், அரசாங்க அறிக்கைகள் (DCS, ICTA, Ministry of Women's Affairs) மற்றும் பண்பியல் ஆய்வு முறைமையில் (Qualitative) 25 பெண்கள் தொழில்முனைவோருடனான கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மற்றும் நேரடி அவதானங்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவை Thematic Analysis முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவுகள் ICT, பெண்களின் பொருளாதார, சமூக, மற்றும் உளவியல் வலிமைகளில் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்துகிறது என்பதைக் காட்டுகின்றன. பெண்கள் ICT அறிவின் மூலம் வணிகத்தை விரிவுபடுத்தி வருமானத்தை உயர்த்தியுள்ளதுடன், சமூக ஊடகங்களில் இணைந்து தன்னம்பிக்கை பெற்றுள்ளனர். அதேவேளை, இணைய வசதி குறைபாடு, மொழித் தடைகள், மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் நம்பிக்கைகள் ICT பயன்பாட்டைத் தடுக்கும் காரணிகளாகக் காணப்பட்டன. அத்துடன் ஆய்வின் முடிவுகள் ICT என்பது வெறும் தொழில்நுட்ப கருவியாக அல்லாது, பெண்களின் சமூக மாற்றத்திற்கும் பொருளாதார விடுதலைக்கும் வழிவகுக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. இதன் மூலம் மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு-3 மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு 5 (SDG 5) ஆகியவற்றின் நோக்கங்கள் வட இலங்கை சமூகத்தில் சாத்தியமாகியுள்ளன.

**திறவுச் சொற்கள்:** *பெண்கள் வலுப்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொழில்முனைவோர், யாழ்ப்பாணம், மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு, நிலையான வளர்ச்சி இலக்கு.*

## Abstract

The objective of this study is to examine the role of Information and Communication Technology (ICT) in empowering women entrepreneurs in the Jaffna District of Northern Sri Lanka. The theoretical foundation of this study is grounded in Millennium Development Goal 3 (MDG 3): *"Promote gender equality and empower women."* Under a qualitative research approach, data were collected through government reports, and semi-structured interviews with 25 women entrepreneurs. The data were analyzed using thematic analysis method. The findings indicate that ICT has a significant impact on women's economic, social, and psychological empowerment. Further the results show women have expanded their businesses and increased their income through ICT-enabled trade activities, while gaining self-confidence by engaging in social media networks. However, the study found barriers to ICT use, such as limited internet access, language constraints, and prevailing social norms and attitudes. Overall, the results affirm that ICT is not merely a technological tool, but a catalyst for social transformation and economic liberation for women. This trends supports the realization of both Millennium Development Goal 3 and Sustainable Development Goal 5 (SDG 5) can achieve gender equality and empower all women in the context of Northern Sri Lankan society.

**Keywords:** *Women Empowerment, Information and Communication Technology, Entrepreneurship, Jaffna Millenium Development Goal, Sustainable Development Goal.*

## 1. அறிமுகம்

நவீன உலகின் பொருளாதாரம் தகவல் தொடர்பாடல் மைய பொருளாதாரமாக மாறியுள்ளது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) உலகின் சமூக பொருளாதார அமைப்பை மறுவடிவமைக்கும் முக்கிய சக்தியாக விளங்குகிறது. இது கல்வி, சுகாதாரம், வணிகம், நிர்வாகம் மற்றும் மக்கள் பங்கேற்பு போன்ற துறைகளில் மட்டுமல்லாமல், பெண்களின் வலிமையையும் வாழ்க்கை தரத்தையும் மேம்படுத்துவதில் தீர்மானகரமான பங்கு வகிக்கிறது (World Bank, 2021). குறிப்பாக, வளர்ந்து வரும் நாடுகளில் ICT பெண்களின் தொழில்முனைவுத் திறனை மேம்படுத்துவதற்கும், அவர்களை பொருளாதார சுயசார்புநிலையுடன் சமூக முடிவெடுப்புகளில் ஈடுபடுத்துவதற்கும் வழிவகுக்கிறது (UNDP, 2020).

பெண்கள் வலுப்படுத்தல் (Women Empowerment), நிலையான வளர்ச்சிக்கான முக்கிய தளமாகும். மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகள் (Millennium Development Goals – MDGs) 2000 ஆம் ஆண்டு உலக நாடுகள் ஏற்றுக்கொண்ட போது, அதன் மூன்றாவது இலக்கு (Goal 3) “Gender Equality and Empowerment of Women” எனும் தலைப்பில் பெண்களின் சமூக மற்றும் பொருளாதார சமநிலையை வலியுறுத்தியது (UNDP, 2005). அதேபோல், நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals – SDG 5) 2030 க்குள் பெண்கள் மற்றும் சிறுமிகளின் முழுமையான வலுப்படுத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது (United Nations, 2015). இந்த இலக்குகள் ICT பெண்களின் முன்னேற்றம், கல்வி, தொழில் வாய்ப்பு, மற்றும் சமூக பங்கேற்புக்கு முக்கிய கருவியாகக் குறிப்பிடுகின்றன (OECD, 2019).

வட இலங்கை சமூக அரசியல் பின்னணியைக் கொண்ட பிராந்தியம் என்பதால், பெண்களின் வாழ்க்கையில் ICT பயன்பாட்டின் முக்கியத்துவம் மிகவும் ஆழமானது. நீண்டகால உள்நாட்டுப் போர் (1983–2009) காரணமாக பெரும்பாலான குடும்பங்கள் பெண்களால் வழிநடத்தப்படும் “பெண் தலைமைத்துவக்˙குடும்பங்கள்” ஆக மாறியுள்ளன (Silva et al., 2018). போருக்குப் பிறகு சமூக மறுசீரமைப்பில் பெண்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். அவர்கள் குடும்பத்தின் பொருளாதாரச் சுமையை தாங்குவதுடன், சிறு தொழில்முனைவுத் துறையில் ஈடுபட்டு சமூகத்தில் தங்கள் இடத்தை மீட்டெடுக்க முயற்சி செய்கின்றனர் (Silva et al., 2018).

இத்தகைய சூழலில், ICT பயன்பாடு பெண்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது. இணையம், மொபைல் தொலைபேசி, சமூக ஊடகங்கள், மற்றும் டிஜிட்டல் நிதி சேவைகள் வழியாக பெண்கள் தங்கள் வணிகங்களை விரிவுபடுத்தி வருகின்றனர் (ICTA Sri Lanka, 2022). ICT பயன்பாடு பெண்களுக்கு மூன்று அடிப்படை வலிமைகள் வழங்குகிறது. தகவலை அணுகுதல், வணிக வலைப்பிணைப்புக்களில் இணைதல், மற்றும் முடிவெடுக்கும் திறன். இதன் மூலம் அவர்கள் தங்கள் சமூக நிலையை உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

உதாரணமாக, வட இலங்கையில் பனைப்பொருட்கள் தயாரிப்பாளர்கள், தையல் தொழிலாளர்கள், மற்றும் உணவுத் தயாரிப்பு பெண்கள் குழுக்கள் தங்கள் தயாரிப்புகளை Facebook, WhatsApp, மற்றும் Instagram போன்ற தளங்களில் விளம்பரப்படுத்தி வருகிறார்கள். இதனால் அவர்களின் தயாரிப்புகள் உள்ளூர் சந்தையிலிருந்து வெளிநாட்டு சந்தைகளுக்குப் பரவத் தொடங்கியுள்ளன. (Jaffna Chamber of Commerce, 2023). ICT அடிப்படையிலான வணிகப் பிணைப்பு பெண்களுக்கு தன்னம்பிக்கை, வணிக சுயசார்புநிலை, மற்றும் சமூக அங்கீகாரம் ஆகியவற்றை வழங்குகிறது.

எனினும் ICT பயன்பாட்டில் அதன் பல்வேறு சாத்தியங்கள் வாய்ப்புக்கள் இருந்தபோதிலும், இலங்கையில் பெண்கள் தொழில்முனைவோர் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். முக்கியமாக, தொழில்நுட்ப அறிவின் பற்றாக்குறை, மொழித் தடைகள், இணைய வசதியின்

குறைவு, சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் சைபர் பாதுகாப்பு பிரச்சினைகள் ஆகியவை குறிப்பிடத்தக்க தடைகளாக உள்ளன (Tennakoon et al., 2022). மேலும், பெண்கள் பெரும்பாலும் குடும்ப பொறுப்புகள் மற்றும் கலாசார எதிர்பார்ப்புகளால் ICT பயிற்சி அல்லது மெய்நிகர் வணிகத்திற்குத் தேவையான நேரத்தையும் வளங்களையும் ஒதுக்க முடியாமல் போகின்றனர் (Athapaththu & Nishantha, 2021).
இதனால் ICT வழியாக பெண்கள் தொழில்முனைவு வளர்ச்சி இலங்கையில் முழுமையாக நிறைவேறவில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. ஆனால் ICT பயன்பாட்டின் திறனைச் சரியான கொள்கைகளும் திறனூட்டும் (capacity building) முயற்சிகளும் வழிநடத்தியதால், அது பெண்களின் பொருளாதார சுயநிலையை மட்டுமல்ல, சமூக நீதி நோக்கங்களையும் நிறைவேற்றும் சக்தியாக மாறும் (World Economic Forum, 2022). மேலும் ICT மற்றும் பெண்கள் வலுப்படுத்தல் தொடர்பான ஆய்வுகள் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக, Hafkin and Taggart (2001) கூறுவதுபோல், ICT பெண்களுக்கு "Information power" மற்றும் "Communication freedom" ஆகிய இரு முக்கிய திறன்களையும் வழங்குகிறது. மேலும், Sen (1999) தனது Capability Approach கோட்பாட்டில் வலியுறுத்தியது போல, வலுப்படுத்தல் என்பது மனிதர் தமது திறன்களை விரிவுபடுத்தி தன் வாழ்க்கையை நிர்ணயிக்கும் திறனாகும். ICT இதனை நிகழ்த்துவதற்கான கருவியாக விளங்குகிறது. அது பெண்களுக்கு information freedom மற்றும் choice capability ஆகிய இரண்டையும் வழங்குகிறது (Sen, 1999).

வட இலங்கைச் சூழலில் ICT-அடிப்படையிலான பெண்கள் தொழில்முனைவு வளர்ச்சி சமூக மாற்றத்தின் முக்கிய வடிவமாகப் பார்க்கப்படுகிறது. சமூக அரசியல் சவால்களை எதிர்கொண்ட மகளிர் சமூகத்திற்குள், ICT புதிய நம்பிக்கை வடிவமாக உருவாகியுள்ளது. பெண்கள் இப்போது தொழில்நுட்பத்தின் வழியாக தங்கள் குரலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர். UN Women (2021) அறிக்கை கூறுவது போல, "Digital inclusion is not just access to technology, but participation in development." அதாவது, ICT மூலம் பெண்கள் சமூகத்தின் செயல்பாட்டில் பங்கேற்பாளர்களாக மாறுகின்றனர்.

வட இலங்கையில் ICT வழி பெண்கள் வலுப்படுத்தல் பல தளங்களில் வெளிப்படுகிறது. பொருளாதார தளம்: ICT பயன்பாடு வருமானம், சந்தை விரிவாக்கம், மற்றும் நிதிச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துகிறது (ADB, 2020). இவற்றுடன் இணைந்து, வட இலங்கையின் சமூகப் பண்பாடும், குடும்ப அமைப்பும், ICT வழி பெண்கள் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்தும் அல்லது ஊக்குவிக்கும் காரணிகளாக இருக்கின்றன. சில குடும்பங்கள் பெண்களின் இணையப் பயன்பாட்டை எதிர்மறையாகக் காண்பதும், சிலர் அதை ஊக்குவிப்பதும், ICT பயன்பாட்டின் சமூக ஏற்றத்திறனை தீர்மானிக்கிறது (Silva, 2020).

இந்தச் சூழலில் இவ்வாய்வின் முக்கிய நோக்கம், வட இலங்கையில் ICT பெண்கள் தொழில்முனைவோர்களின் வலுப்படுத்தலில் எவ்வாறு பங்காற்றுகிறது என்பதை ஆராய்வதாகும். குறிப்பாக, ICT பயன்பாடு பெண்களின் வருமானம், சமூக பங்கு, தன்னம்பிக்கை மற்றும் தொழில்முனைவு வளர்ச்சியில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகிறது என்பதை மதிப்பீடு செய்வது இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும் ICT பயன்பாட்டில் அவர்கள் எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் வாய்ப்புக்களையும் அடையாளம் காண்பதே இவ்வாய்வின் துணை நோக்கங்களாகும்.

ஆகவே, இவ்வாய்வு ICT வழியாக வட இலங்கையில் பெண்கள் தொழில்முனைவோரின் வலுப்படுத்தல் நிகழும் விதத்தையும், அதற்கான தடைகள் மற்றும் கொள்கை வாய்ப்புக்களையும் ஆராய்கிறது. இது மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு 3 மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு 5 ஆகியவற்றின் அடிப்படை நோக்கமான "பெண்களின் சமநிலை மற்றும் சமூக வலிமை" என்ற இலக்கை அடைவதற்கான உள்ளூர் ஆய்வுப் பங்களிப்பாக விளங்கும்.

## 1.1 இலக்கிய மீளாய்வு

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) மற்றும் பெண்கள் வலுப்படுத்தல் (Women Empowerment) குறித்த ஆய்வுகள் கடந்த இருபது ஆண்டுகளில் உலகளாவிய மற்றும் பிராந்திய அளவுகளில் விரிவடைந்துள்ளன. பெண்களின் சமூக, பொருளாதார, மற்றும் உளவியல் முன்னேற்றத்தில் ICT மிகுந்த தாக்கம் செலுத்துவதாக பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இப்பகுதி உலகளாவிய மற்றும் இலங்கைச் சூழலில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய ஆய்வுகளை ஒருங்கிணைத்து, ICT மற்றும் பெண்கள் தொழில்முனைவு வழிப்படுத்தலுக்குமிடையிலான உறவை ஆராய்கிறது.

Hafkin & Taggart (2001) தங்கள் புகழ்பெற்ற ஆய்வில், ICT பெண்களுக்கு ''அறிவின் அதிகாரம்'' (Power of Information) மற்றும் ''தொடர்பின் சுதந்திரம்'' (Freedom of Communication) வழங்குகிறது எனக் குறிப்பிடுகின்றனர். அவர்களின் கருத்துப்படி, ICT பெண்களுக்கு தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், சந்தைத் தகவல்களை அணுகவும், புதிய திறன்களை கற்றுக்கொள்ளவும் வழிவகுக்கிறது. இதனால் ICT, பாலினச் சமநிலை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய கருவியாக மாறுகிறது.

Sen (1999) தனது Development as Freedom நூலில், வலுப்படுத்தல் என்பது ஒருவரின் திறன்களை விரிவுபடுத்தி, தன் வாழ்க்கை முடிவுகளை நிர்ணயிக்கும் திறன் என விளக்குகிறார். இந்த ''திறன் விரிவாக்கம்'' (Capability Expansion) ICT வழி எளிதாக சாத்தியமாகிறது. தகவல் அணுகல் மற்றும் அறிவு பகிர்வு பெண்களின் சமூக பங்கேற்பையும் வணிக சுயநிலையையும் மேம்படுத்துகிறது.

Castells (2000) ICT–I ''சமூக வலைப்பின்னல்களின் புதிய பொருளாதார அடித்தளம்'' எனக் குறிப்பிடுகிறார். அவரது Network Society Theory படி, தகவல் சமூகத்தில் பெண்களின் பங்கு அவர்கள் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதன் அடிப்படையில் எனக்குறிப்பிடப்படுகின்றது. ICT பயன்பாட்டின் மூலம் பெண்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து கூட்டுறவுப் பங்காளிகளாக மாறுகின்றனர்.

Kabeer (1999) தனது ஆய்வில், பெண்கள் வலுப்படுத்தல் மூன்று கூறுகளால் அளவிடப்படலாம் எனக் கூறுகிறார்: வளங்கள் (Resources), அனுபவம் (experience) மற்றும் சாதனைகள் (Achievements). ICT இம்மூன்றிலும் நேர்மறை பங்கு வகிக்கிறது. அது வளங்களுக்கான அணுகலை மேம்படுத்துகிறது; முடிவெடுக்கும் அனுபவத்தை ஊக்குவிக்கிறது; மற்றும் சாதனைகளின் அளவைக் கூட்டுகிறது. இதனால் ICT பெண்களைச் சுயநிர்ணய திறன் கொண்டவர்களாக மாற்றுகிறது.

Huyer & Hafkin (2007) ICT இல் பெண்கள் பங்கு பற்றாமையின் அடிப்படை காரணங்களை ஆய்வு செய்து, ''டிஜிட்டல் பாலினப் பிரிவு'' (Digital Gender Divide) என்ற கருத்தை அறிமுகப்படுத்தினர். அவர்கள் கூறியபடி, கல்வி குறைவு, தொழில்நுட்ப பயிற்சி பற்றாக்குறை, சமூகத் தடைகள், மற்றும் குடும்பப் பொறுப்புகள் பெண்களின் ICT பங்குபற்றலைக் குறைக்கின்றன. ஆனால் இதேசமயம் ICT அவர்களை சமூக வலைப்பின்னல்களுடன் இணைக்கும் சக்தியாகவும் விளங்குகிறது.

Agarwal (2018) இந்தியா மற்றும் தென் ஆசியாவில் பெண்கள் தொழில்முனைவோர் ICT வழி எவ்வாறு வணிகத்தை முன்னெடுக்கின்றனர் என்பதைக் கண்டறிந்தார். அவரது ஆய்வின் படி, ICT பயன்பாடானது பெண்களின் வணிக திறனை மேம்படுத்தி, அவர்களுக்கு நேரடி சந்தை அணுகலை வழங்குகிறது. Facebook, WhatsApp, Instagram போன்ற சமூக ஊடகங்கள்

குறைந்த செலவில் வணிக விளம்பரம் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புக்கு உதவுகின்றன. இதன் மூலம் "micro-entrepreneurship" என்ற புதிய பொருளாதார தளம் உருவாகியுள்ளது.

Rahma et al., (2025) பங்களாதேஷ் நாட்டில், ICT மற்றும் பெண்கள் வலுப்படுத்தல் இடையிலான உறவை ஆய்வு செய்தனர். அவர்களது ஆய்வின் முடிவு, ICT பயன்பாடு பெண்களின் தன்னம்பிக்கை மற்றும் சமூக மரியாதையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது என குறிப்பிடப்படுகிறது. ICT ஐப் பயன்படுத்தும் பெண்கள், ICT ஐப் பயன்படுத்தாத பெண்களைவிட 40% அதிக வருமானம் பெற்றுள்ளனர் என்பதும் அவர்களின் ஆய்வின் முக்கிய முடிவாகும்.

இலங்கைச் சூழலில் Tennakoon et al., (2022), தனது Digital Gender Gaps in Sri Lanka எனும் ஆய்வில், பெண்களின் ICT பங்குபற்றலில் நகர–கிராமப் பாகுபாடு (Urban-Rural Divide) குறிப்பிடத்தக்கதாக உள்ளது எனக் குறிப்பிடுகின்றார். நகரப் பெண்களில் 72% பேர் இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் ஆனால் கிராமப் பெண்களில் இது 35% மட்டுமே. இது ICT வசதிகள் மற்றும் கல்வி நிலையின் மாறுபாடு காரணமாக ஏற்பட்டதாக அவர் கூறுகிறார்.

Athapaththu & Nishantha (2021), இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரில் ICT பயன்பாட்டை ஆய்வு செய்தனர். ஆய்வின் முடிவில் ICT பயன்பாடு பெண்கள் தொழில்முனைவோரின் வணிகத் திறன் மற்றும் வாடிக்கையாளர் பிணைப்பை அதிகரிக்கிறது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், பெண்களின் பயிற்சி வாய்ப்புகள் குறைவாக இருப்பது ICT பயன்பாட்டின் முக்கிய தடையாகக் காணப்படுகிறது. வடக்கு மாகானத்தில் பெண்கள் போருக்குப் பிந்தைய சூழலில் குடும்பத் தலைவர்களாக மாறியுள்ளனர் ஆனால் அவர்களின் பொருளாதார முன்னேற்றம் ICT பயன்பாட்டின் குறைபாடு காரணமாக தடைக்குள்ளாகியுள்ளது. ICT திறன்களை மேம்படுத்தும் பயிற்சிகள் அவர்கள் சமூக மீளிணைவுக்கான முக்கிய கருவியாக அமையலாம் என அவர் பரிந்துரைக்கிறார்.

Silva (2020) தனது Post-war Livelihoods of Women-headed Households ஆய்வில், ICT வட இலங்கையின் பெண்களுக்கு பொருளாதார சுயநிலையை அளிக்கக்கூடிய திறன் கொண்டது எனக் கூறுகிறார். குறிப்பாக, டிஜிட்டல் நிதிச் சேவைகள் (LankaQR, EzCash) வழியாக பெண்கள் வணிகக் கடன்கள், நிகழ்நிலை விற்பனை மற்றும் வங்கித் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பைப் பெறுகின்றனர். இதன் மூலம் அவர்கள் தங்களது குடும்ப வருமானத்தையும் சமூக நிலையையும் மேம்படுத்துகின்றனர்.

இலங்கையில் டிஜிட்டல் இடைவெளி, குறிப்பாக பாலின அடிப்படையிலான டிஜிட்டல் இடைவெளி, சமீப காலங்களில் பல ஆய்வுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. LIRNEasia (2020) வெளியிட்ட கொள்கை அறிக்கையில், பெண்கள், முதியோர் மற்றும் கிராமப்புற மக்களுக்கு டிஜிட்டல் திறன்கள் மற்றும் இணைய அணுகல் குறைவு முக்கிய தடையாக இருப்பதாக குறிப்பிடுகிறது. இதன் விளைவாக பெண்கள் ஆன்லைன் கல்வி, வணிகம் மற்றும் நிதிச் சேவைகளில் பின்தங்குகிறார்கள். அதேபோல், Wanigasinghe (2023) தனது IPS–Southern Voice ஆய்வில், இலங்கையின் டிஜிட்டல் மாற்றத்தின்போது பெண்கள் புறக்கணிக்கப்படுவதாகவும், தொழில்நுட்ப வசதிகள், நிதி ஆதரவு, மற்றும் சமூக அனுமதி பற்றாக்குறை காரணமாக அவர்களின் பங்கேற்பு குறைவதாகவும் வலியுறுத்துகிறார். Galpaya (2022) தனது UN Women அறிக்கையில், ஆசிய நாடுகளில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையிலான இணையப் பயன்பாட்டு வேறுபாடு சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு காரணிகளால் உருவாகின்றது என்று விளக்குகிறார். மேலும், Galpaya (2019) தனது IDRC அறிக்கையில், தெற்காசிய நாடுகளில் டிஜிட்டல் அணுகல் மற்றும் பயன்பாட்டில்

பெண்கள் தொழில்நுட்ப விழிப்புணர்வு மற்றும் கல்வி வாய்ப்புகளின் பற்றாக்குறையால் பின்தங்குவதாக குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வுகள் அனைத்தும் சேர்ந்து, இலங்கையில் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் டிஜிட்டல் கொள்கைகள் மற்றும் பெண்களுக்கு தொழில்நுட்ப அடிப்படையிலான திறன் மேம்பாட்டு திட்டங்கள் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன.

UNDP (2020) வெளியிட்ட Digital Transformation and Women's Economic Empowerment அறிக்கையில், ICT வழி பெண்கள் தொழில்முனைவு வளர்ச்சி "inclusive growth" நோக்கத்தில் முக்கிய பங்காற்றுகிறது எனக் கூறப்படுகிறது. இந்த அறிக்கை வலியுறுத்துவது, ICT கல்வி மற்றும் பயிற்சி மூலம் பெண்கள் தொழில்முனைவோரின் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் சமுதாயத்தின் மொத்த உற்பத்தி திறனும் உயரும் என்பதாகும்.

ICTA Sri Lanka (2022) வெளியிட்ட Women in Digital Economy அறிக்கை, இலங்கையின் பெண்கள் ICT துறையில் பங்கேற்பு இன்னும் 30% க்கும் குறைவாக உள்ளது என குறிப்பிடுகிறது. எனினும், பெண்கள் தொழில்முனைவோர் ICT அதிகம் பயன்படுத்தும் துறைகள்: fashion, palmyrah-based crafts, processed foods, tailoring and textile industries எனக் காணப்படுகிறது. இதன் மூலம் ICT பெண்களுக்கு புதிய பொருளாதார வாய்ப்புகளையும், சமூக வலிமையையும் அளிக்கிறது.

EQUALS Global Partnership (2021) Gender Digital Divide Report இல், ICT மற்றும் பாலின சமநிலை இடையிலான உறவை ஆராய்ந்துள்ளது. அதன் படி, ICT பயன்பாட்டின் சமத்துவம் இல்லாதது உலகளவில் 260 மில்லியன் பெண்களைத் தகவல் அணுகலில் இருந்து விலக்கி வைத்துள்ளது. இதனைத் தீர்க்க கல்வி, கொள்கை மற்றும் சமூக ஆதரவு அவசியம் என அவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

World Bank (2021) Women and ICT in South Asia ஆய்வில், ICT அடிப்படையிலான பெண்கள் தொழில்முனைவோர் வருமானம், சமூக அங்கீகாரம் மற்றும் குடும்ப முடிவெடுப்புகளில் முக்கிய பங்காற்றுகின்றனர் எனக் கூறுகிறது. அவர்களின் ஆய்வில் ICT பயன்பாட்டின் மூலம் 27% பெண்கள் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்தியுள்ளனர் மேலும் 33% பெண்கள் தன்னம்பிக்கையில் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

வட இலங்கைச் சூழலில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வு, மேற்கண்ட உலகளாவிய மற்றும் உள்ளூர் ஆய்வுகளின் அடிப்படையில் ICT பயன்பாட்டின் தற்போதைய நிலையை, பெண்களின் தொழில்முனைவு வலுப்படுத்தல் அளவை, மற்றும் ICT பயன்பாட்டில் காணப்படும் தடைகள் மற்றும் வாய்ப்புகளை ஒருங்கிணைத்து ஆய்வு செய்கிறது. இது உள்ளூர் சமூகத்தின் உண்மையான அனுபவங்களின் அடிப்படையில் ICT-driven Women Empowerment Framework ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படுகிறது.

## 2. ஆய்வு முறையியல்

இவ்வாய்வின் முறைமையியல் பல அடுக்குகளை உடையது. அரசாங்க அறிக்கைகள் மற்றும் தரவுகள் மூலம் சமூகப் பின்னணியை வரையறுக்கிறது. நேர்முகப் பேட்டிகள் மூலம் மனித அனுபவங்களைப் பதிவு செய்கிறது. இது "தகவல் ஆதாரமான பண்பியல் முறைமையியல்" (Information-based Qualitative Methodology) எனக் கூறலாம். மில்லேனியம் இலக்கு-3 இதற்கு தத்துவ அடித்தளமாக விளங்குகிறது. ஏனெனில் அது வலுப்படுத்தலை வெறும் பொருளாதார முன்னேற்றமாக அல்லாது, சமூக விடுதலையாகக் காண்கிறது.

இந்த ஆய்வு இரண்டு கோட்பாடுகளை இணைக்கிறது. பெண்கள் வலுப்படுத்தல் கோட்பாடு (Women Empowerment Theory) மற்றும் தகவல் சமூகக் கோட்பாடு (Information Society Theory). பெண்கள் வலுப்படுத்தல் கோட்பாடு, பெண்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தி, சமூக பங்குபற்றுதலில் முழுமையாக ஈடுபடுவதற்கான செயல்முறை என்று வலியுறுத்துகிறது (Kabeer, 1999). தகவல் சமூகக் கோட்பாடு, மனித மேம்பாட்டின் முக்கிய அடித்தளமாகக் கருதுகிறது (Castells, 2000). இவ்விரண்டும் இணையும் போது ICT, பெண்களின் வலிமை மற்றும் திறனை வெளிப்படுத்தும் சக்திவாய்ந்த கருவியாக மாறுகிறது.

இந்த ஆய்வு அளவுசார் (Quantitative) மற்றும் பண்பியல் (Qualitative) முறைகளின் மூலம் தரவுகளை சேகரிக்கிறது. ஏனெனில் பெண்களின் அனுபவங்கள், சவால்கள் மற்றும் சமூக மாற்றங்கள் எண்களால் மட்டும் விளக்கப்பட முடியாது. பெண்களின் குரல், உணர்ச்சி, மற்றும் சமூக நிலை ஆகியவை அவர்களின் வலிமையை உணர்வதற்கான முக்கியமான வழிகள் என்பதால், இவ்வாய்வு அவற்றை நேரடியாகக் கேட்டு பதிவு செய்யும் முறையைப் பயன்படுத்துகிறது. இங்கு அரசாங்க அறிக்கைகள், பொது தரவுகள், மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பேட்டிகள் ஆகியவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்கை மதிப்பீடு செய்யும் போது, ஆய்வாளர் முதலில் அரசாங்க அறிக்கைகள் மற்றும் தரவுகள் மூலம் பெண்களின் தற்போதைய நிலையை ஆராய்ந்தார். Department of Census and Statistics (DCS) வெளியிட்ட ICT பயன்பாடு மற்றும் தொழில்முனைவு புள்ளிவிவரங்கள், பெண்கள் தொழில்முனைவு வளர்ச்சியின் பரிமாணங்களை விளக்குகின்றன. அதனுடன், Ministry of Women, Child Affairs and Social Empowerment (2022) வெளியிட்ட "Women's Development Report" வட மாகாணத்தின் பெண்கள் ICT பயிற்சி மற்றும் தொழில்முனைவு பங்கேற்பில் அதிகரித்த ஆர்வம் இருப்பதாக குறிப்பிடுகிறது. இவ்விதமான அரசாங்கத் தரவுகள் பெண்கள் சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தும் பின்னணியைக் காட்டுகின்றன. ஆனால் அவை மனித அனுபவங்களின் நுண்ணுணர்வுகளைப் பதிவு செய்ய முடியாது. ஆதலால், ஆய்வாளர் பண்பியல் முறையினைத் தேர்வு செய்துள்ளார்.

அரை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பேட்டிகள் (Semi-structured Interviews) மூலம், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 25 பெண்கள் தொழில்முனைவோரின் அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு பேட்டியும் சுமார் 45 முதல் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது. இந்தக் பண்பியல் ஆய்வில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ICT தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் 25 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களது அனுபவங்களில் உள்ள பொதுவான மாறுபாடுகளைக் கண்டறிந்து, ஒரு கருப்பொருள் அடிப்படையிலான கோட்பாட்டை உருவாக்குவதற்காக தேர்வான மாதிரி (purposive sampling) பின்பற்றப்பட்டது. ஆய்வுகளுக்குப் பொதுவாக 20-30 நபர்கள் போதுமானது எனக் கூறுகின்றனர் (Charmaz, 2006; Creswell, 2013). மேலும் Guest et al., (2006) மேற்கொண்ட ஆய்வில், ஒரேசாதாரண பண்புகள் கொண்ட மக்களிடையே 12–20 நேர்காணல்களில் உண்மையான தரவுத் திடம்சேர்க்கை (saturation) அடைவது சாத்தியம் என கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் பகுதியில் உள்ள பெண்கள் எல்லோரும் ஒரே சமூக-பண்பாட்டு மற்றும் யுத்த பின்னணி கொண்டவர்கள் என்பதால், 25 நபர்களை உள்ளடக்கிய இந்த மாதிரிச் சான்று, முக்கியமான உள்ளடக்கங்கள் மற்றும் கூறுகளைக் கண்டறிவதற்கு சிறந்ததாகும்..

### 2.1 ஆய்வு பிரச்சினை

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் தொழில்முனைவோர்கள் அதிகரித்து வருகிறார்கள் ஆனால் அவர்களது ICT வழி வணிகத்தை விரிவுபடுத்தும் திறன் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. ICT பயன்பாடு, வருமானம் மற்றும் சமூக பங்குபற்றல் இடையிலான உறவு துல்லியமாக புரிந்துகொள்ளப்படவில்லை. பல அரசாங்க அறிக்கைகள் ICT பயிற்சிகள் மற்றும்

பெண்கள் தொழில்முனைவு மேம்பாடு பற்றி குறிப்பிடுகின்றன, ஆனால் அந்த பயிற்சிகளின் உண்மையான சமூக விளைவுகள் பற்றிய தரவியல் ஆய்வுகள் குறைவாக உள்ளன (Ministry of Women's Affairs, 2022; ICTA, 2023).

மேலும், சமூக மனப்பான்மை, ICT பயன்பாட்டை பாதிக்கிறது. சில குடும்பங்களில் பெண்கள், இணையம் பயன்படுத்துவது, சமூக ஊடகப் பயன்பாடு "அதிருப்திகரமானது" எனக் கருதப்படுகிறது. இதனால், பெண்கள் ICT வழி வணிக வாய்ப்புகளை பயன்படுத்தத் தயங்குகின்றனர். இதே சமயம், கல்வியறிவு மிக்க இளம் பெண்கள் ICT ஐ தன்னம்பிக்கையுடன் பயன்படுத்துகின்றனர் (Hilbert, 2011). இந்த முரண்பாடான நிலை வட இலங்கையில் ICT மற்றும் பெண்கள் வலுப்படுத்தல் இடையிலான உறவை ஆழமாக ஆராய வேண்டிய அவசியத்தை உருவாக்குகிறது.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) பெண்கள் வலுப்படுத்தலுக்கான சாதனமாக உலகளவில் பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. எனினும், போர் பாதித்த வட இலங்கையின் தனித்துவமான சமூகப் பண்பாட்டு சூழலை மையமாகக் கொண்ட ஆய்வுகள் மிகக் குறைவாக உள்ளன. குறிப்பாக, ICT பயன்பாட்டில் கல்வியறிவு மிக்க இளம் பெண்கள் மற்றும் கல்வியறிவு குறைந்த பெண்களுக்கு இடையிலான வேறுபாடுகள் பற்றிய விரிவான ஆய்வுகள் இல்லை. மேலும், தற்போது உள்ள ஆய்வுகள் ICT பயன்பாடு மூலம் பெண்கள் வலுப்படுத்தலுக்கான பொது பார்வையை மட்டுமே முன்வைத்து வருகின்றன. அதனால், இந்த ஆய்வு "தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் வட இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் தொழில்முனைவோரின் வலுப்படுத்தலுக்குச் சிறப்பாக பங்களிக்கிறதா?" என்ற முக்கியக் கேள்விக்கு விடை காண முயல்கிறது. இந்த நிலையிலே, யாழ்ப்பாண மாவட்டத்தை மையமாகக் கொண்ட இந்த ஆய்வு, சமூக கட்டுப்பாடுகளுக்கும் இளைய பெண்களின் நவீன சிந்தனைகளுக்கும் இடையேயான முரண்பாடுகளை வெளிக்கொண்டு வருவதால், இது ஒரு முக்கியமான ஆராய்ச்சி இடைவெளியை நிரப்புகிறது.

### 2.2 ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வின் முக்கிய நோக்கம், மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு-3 (MDG 3) , "பெண்களை வலுப்படுத்தி பாலின சமநிலையை மேம்படுத்துதல்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண் தொழில்முனைவோர்களின் வாழ்க்கையில் ICT எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை ஆராய்வதாகும்.

இதற்கான துணை நோக்கங்கள் பின்வருமாறு:

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள், தொழில்முனைவோர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை எந்த வகையில் அணுகி, பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டறிதல்.
2. ICT பயன்பாடு பெண்களின் பொருளாதார வலிமை, சமூக பங்குபற்றல், மற்றும் உளவியல் தன்னம்பிக்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்தல்.
3. ICT பயன்பாட்டில் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக, தொழில்நுட்ப மற்றும் கலாச்சார தடைகளை அடையாளம் காணுதல்.
4. ICT வழி பெண்கள் தொழில்முனைவோர் வலுப்படுத்தலை ஊக்குவிக்க அரசாங்கம் மற்றும் சமூக அமைப்புகள் மேற்கொள்ளக்கூடிய கொள்கைகளை பரிந்துரைத்தல்.

இவை அனைத்தும் மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு-3 இன் அடிப்படை நோக்கங்களுடன் Education, Economic Participation, Decision-making, and Social Equality நேரடியாக இணைகின்றன.

### 2.3 கருதுகோள்கள்

இவ்வாய்வு அடிப்படையில் பண்பியல் (Qualitative) ஆய்வு என்பதால், இதில் கருதுகோள்கள் புள்ளிவிவரக் கோட்பாடுகளாக அல்லாது தீர்மானிப்புக் கருதுகோள்கள் (Propositional Hypotheses) அல்லது conceptual assumptions ஆக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை ஆராய்ச்சியின் திசை மற்றும் மையக் கருத்தை வெளிப்படுத்துகின்றன.

1. **ICT பயன்பாடு பெண்களின் தொழில்முனைவு வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் சக்தியாக உள்ளது:** பெண்கள் ICT வழி சந்தை அணுகலை, வணிக விளம்பரத்தை, மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகளை மேம்படுத்துகின்றனர். இது அவர்களின் பொருளாதார சுயநிலையை உயர்த்துகிறது.
2. **ICT பெண்களின் தன்னம்பிக்கை மற்றும் சமூக பங்குபற்றலை மேம்படுத்துகிறது:** ICT பயன்பாட்டின் மூலம் பெண்கள் தகவல் பகிர்வு, சமூக வலைப்பின்னல் மற்றும் முடிவெடுக்கும் பங்கேற்பில் ஈடுபடுகின்றனர். இது சமூக அங்கீகாரத்தையும் மரியாதையையும் உயர்த்துகிறது.
3. **ICT பயன்பாட்டில் உள்ள தடைகள் பெண்களின் வலுப்படுத்தலைக் குறைக்கின்றன:** இணைய வசதி குறைபாடு, தொழில்நுட்ப அறிவின்மை, மற்றும் சமூக எதிர்ப்பு போன்ற காரணிகள் ICT வழி வலுப்படுத்தல் முன்னேற்றத்தை தடை செய்கின்றன.
4. **ICT திறன் மேம்பாடு (Digital Literacy) பெண்களின் வணிக சுயநிலையை அதிகரிக்கிறது:** பயிற்சி பெற்ற பெண்கள் ICT ஐப் பயன்படுத்தி வணிக முடிவுகளை தாமே எடுக்கத் தொடங்குகின்றனர் இதன் மூலம் அவர்கள் "dependent earners" அல்லாது "decision-makers" ஆக மாறுகின்றனர்.
5. **மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு-3 ICT வழி நடைமுறையில் வெளிப்படுகிறது.** பெண்கள் கல்வி, பொருளாதார பங்கு, மற்றும் சமூக முன்னெடுப்பு ஆகிய தளங்களில் ICT ஐப் பயன்படுத்தி முன்னேறுவதன் மூலம், MDG 3 இன் நோக்கம் யாழ்ப்பாணத்தில் உண்மையான வடிவம் பெறுகிறது.

இந்த கருதுகோள்கள் ஆய்வின் அடிப்படை தத்துவக் கோட்பாட்டை (Empowerment through ICT) உறுதிப்படுத்துகின்றன.

## 3. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இவ்வாய்வின் முடிவுகள் யாழ்ப்பாண மாவட்டத்தை மையப்படுத்தி பெண் தொழில்முனைவோர்களின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணம் வட இலங்கையின் கல்வி மற்றும் தொழில்முனைவு மையமாக இருந்தாலும், பெண்கள் தொழில்முனைவோரின் சமூக பொருளாதார நிலை இன்னும் வளர்ச்சியின் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இவ்வாய்வு, அரசாங்கத் தரவுகள் மற்றும் நேர்காணல்கள் வழியாக, ICT எப்படி அந்த மாற்றத்திற்கான கருவியாக மாறுகிறது என்பதை ஆழமாக விளக்குகிறது.

Department of Census and Statistics, (2022) வெளியிட்ட ICT பயன்பாட்டு அறிக்கை படி, யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்களில் 52.3% பேர் ஸ்மார்ட்போன் பயன்படுத்துகின்றனர். ஆனால், இணையப் பயன்பாடு 41% மட்டுமே. அதே சமயம், தொழில்முனைவு பங்குபற்றல்

(entrepreneurial participation) பெண்களில் 28% எனக் காணப்படுகிறது. இது தெளிவாக ICT மற்றும் தொழில்முனைவு இடையிலான உறவை வெளிப்படுத்துகிறது. தகவல் அணுகல் அதிகமானபோது பெண்களின் பொருளாதார பங்கு வலுப்படுகிறது. எனினும், ICT பயன்பாட்டில் வயது, கல்வி மற்றும் குடும்ப ஆதரவு ஆகியவை முக்கிய தாக்கம் செலுத்துகின்றன.

நேர்முகப் பேட்டிகளில் பெரும்பாலான பெண்கள், ICT அவர்களின் தொழில்முனைவு வாழ்க்கையில் ''மாற்றத்தின் வாயிலாக'' விளங்குகிறது எனக் கூறினர்.

தையல் தொழில்முனைவர் (வயது 42, யாழ்ப்பாணம்)

> ''முன்னால் வாடிக்கையாளர்களை காண கடைக்கு வரவேண்டியது, இப்போது WhatsApp வழி ஆர்டர் எடுக்கிறேன். வேலை நேரத்தையும் சேமிக்கிறேன்.''

இது ICT வழி ஏற்பட்ட நேர முகாமைத்துவம் மற்றும் வணிக செயல்திறன் வளர்ச்சியின் தெளிவான எடுத்துக்காட்டு.

பனைபொருள் கைத்தொழில் செய்யும் பெண் (வயது 33, யாழ்ப்பாணம்)

> ''யாழ்ப்பாணத்தில் வீட்டிலிருந்தே பனைப் பொருட்கள் விற்பனை செய்கிறேன், பண்டிகை நேரங்களில் Facebook குழுக்களில் போட்டோவைப் போட்டு விற்கிறேன் வெளிநாட்டிலிருந்தே ஆர்டர்கள் வரும்.''

சிற்றுண்டி தயாரிப்பாளர் (வயது 52, யாழ்ப்பாணம்)

> ''முன்னால் நான் எனது தயாரிப்பை கிராமத்திற்குள் மட்டுமே விற்றேன். இப்போது Facebook வழியாக கொழும்பிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் ஆர்டர் வருகிறது.''

இத்தரவுகள் ICT இன் வணிக விரிவாக்க சக்தியை வெளிப்படுத்துகிறது. இவ்வாய்வில் பதிவுசெய்யப்பட்ட அனுபவங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் ICT வழி உருவாகும் பெண்கள் வலுப்படுத்தலின் பல அடுக்குகளை வெளிப்படுத்துகின்றன. முதன்மையாக, பொருளாதார வலுப்படுத்தல் தெளிவாகக் காணப்படுகிறது. பல பெண்கள் ICT வழி தங்கள் வணிகத்தை விரிவுபடுத்தியதுடன், குடும்ப வருமானத்தில் முக்கிய பங்காற்றத் தொடங்கியுள்ளனர். ICTA (2022) அறிக்கை கூறுவது போல, யாழ்ப்பாணத்தில் ICT பயிற்சி பெற்ற பெண்கள் சராசரியாக ICT பயிற்சி பெறாத பெண்களைவிட 35% அதிக வருமானம் ஈட்டுகின்றனர். இது ICT கல்வி மற்றும் தொழில்முனைவு வளர்ச்சி இடையிலான நேரடி உறவை உறுதிப்படுத்துகிறது.

அடுத்ததாக, சமூக வலுப்படுத்தல் பெரிதும் வெளிப்பட்டது. பல பெண்கள், சமூக ஊடகங்கள் வழி பிற பெண்களுடன் இணைந்து அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறனர்.

சிற்றுண்டி தயாரிப்பாளர் (வயது 45, யாழ்ப்பாணம்)

> ''Whatsapp குழுக்களில் சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்கிறோம் யாராவது வணிக பிரச்சினை சொன்னால் மற்றவர்கள் வழி சொல்வார்கள்.''

பெண் தொழில்முனைவர் (வயது 40, யாழ்ப்பாணம்)

> "WhatsApp குழுக்களில் மற்ற பெண்களுடன் சேர்ந்து அனுபவம் பகிர்ந்துகொள்கிறோம் இது நமக்கு தன்னம்பிக்கை தருகிறது."

இது ICT பெண்களிடையே சமூக பிணைப்பையும் peer support network ஐயும் உருவாக்கியுள்ளது. சமூக வலைப்பின்னல் பெண்களின் தன்னம்பிக்கையை உயர்த்துவதோடு, அவர்களின் சமூக அங்கீகாரத்தையும் வலுப்படுத்துகிறது. மேலும் ICT வழி உளவியல் வலுப்படுத்தல் மிகுந்த தாக்கம் செலுத்தியுள்ளது. முன்பு கணவன் அல்லது குடும்பத்தினரின் உதவியுடன் வணிக முடிவுகளை எடுத்த பெண்கள், இப்போது தாங்களே முடிவு எடுக்கத் தொடங்கியுள்ளனர்.

பாரம்பரிய கைவினை விற்பனையாளர் (வயது 28, யாழ்ப்பாணம்)

> "நான் விலை நிர்ணயம் செய்கிறேன் நான் வாடிக்கையாளர்களுடன் பேசுகிறேன். இது எனக்கு பெரும் நம்பிக்கையைத்தருகிறது. இதனால் எனக்கு இலாபம் கிடைக்கிறது."

இது ICT வழி உருவாகும் சுயதன்னம்பிக்கையின் வெளிப்பாடு ஆகும். ICT வழி கிடைக்கும் தகவல் மற்றும் சுயநிலை, பெண்களை "நம்பிக்கையுள்ள வணிகத் தலைவர்களாக" மாற்றுகிறது. அதே நேரத்தில், ICT பயன்பாட்டில் உள்ள தடைகள் இன்னும் தீவிரமாகக் காணப்படுகின்றன. பேட்டிகளில் 60% பெண்கள், இணைய வசதி குறைபாடு மற்றும் செலவினம் அதிகம் என்பதைக் கூறினர்.

பெண் தொழில்முனைவர் (வயது 35, யாழ்ப்பாணம்)

> "இணையத்திற்காக மாதம் ரூ.2000 செலவு ஆகின்றது. ஆனால் சில நேரங்களில் நெட்வொர்க் கிடைக்காது."

இந்த கூற்று ICT உள்கட்டமைப்பின் பற்றாக்குறையை வெளிப்படுத்துகிறது. அதற்கு மேல், சில பெண்கள் சமூக எதிர்ப்பைச் சந்திக்கின்றனர்.

பெண் தொழில்முனைவர் (வயது 26, யாழ்ப்பாணம்)

> "என்ன காரணம் தினமும் போன் பயன்படுத்துகிறாய்? ஏன் அடிக்கடி போன் வருகின்றது?"

என்ற கேள்விகள் குடும்பத்திலிருந்து வரும் என வயதிற்குறைந்த தொழில்முனைவோர் சிலர் குறிப்பிட்டனர். இது போன்ற பாரம்பரிய மனப்பான்மைகள் ICT பயன்பாட்டைத் தடை செய்கின்றன.


பேட்டிகளில் கல்வி மற்றும் தலைமுறை வேறுபாடும் வெளிப்பட்டது. இளம் பெண்கள் ICT ஐ தன்னம்பிக்கையுடன் பயன்படுத்துகின்றனர். ஆனால் மூத்த பெண்கள் தொழில்நுட்பத்தின் மீதான அச்சத்தை வெளிப்படுத்தினர். 50 வயது பெண் ஒருவர் பின்வருமாறு கூறினார்.

சிறிய மளிகைக்கடை உரிமையாளர் (வயது 50, யாழ்ப்பாணம்)

> "நான் பயப்படுகிறேன் ஏதாவது மாறி அழுத்தி ஏதாவது அனுப்பிவிடுவேனோ? போனை பழுதாக்கி விடுவேனோ?"

இதனால் ICT பயன்பாட்டில் வயது அனுபவ வேறுபாடுகள் வலிமையான செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக மாறுகின்றன.

அரசாங்க தரவுகளும் இதையே உறுதிப்படுத்துகின்றன ( **உரு** 1). Ministry of Women's Affairs (2022) அறிக்கை படி, யாழ்ப்பாண மாவட்டத்தில் ICT பயிற்சி பெற்ற பெண்களில் 68% பேர் தங்கள் தொழில்முனைவுத் திறன்களை மேம்படுத்தியுள்ளனர். ஆனால் ICT பயிற்சி பெறாத பெண்களில் இது 37% மட்டுமே. அதேபோல், ICTA (2022) அறிக்கை கூறுவது போல, ICT பயன்பாட்டின் மூலம் 45% பெண்கள் வணிக விரிவாக்கம் கண்டுள்ளனர் மேலும் 32% பேர் சமூக நிகழ்வுகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். இதன் மூலம் ICT பெண்களை தனிமையிலிருந்து சமூகச் தலைவர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் மாற்றியுள்ளது.




**உரு 1: யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கான ICT பயிற்சியின் தாக்கங்கள்**
மூலம்: 2022, ICTA and Ministry of Women Affair

மொத்தத்தில் யாழ்ப்பாண பெண்களின் ICT அனுபவங்கள் three-dimensional empowerment எனக் கூறலாம். பொருளாதார சுயசார்புநிலை, சமூக பங்குபற்றல், மற்றும் உளவியல் தன்னம்பிக்கை. இவை மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு 3 வலியுறுத்தும் "பெண்களின் சுயநிலை மற்றும் முடிவெடுக்கும் திறன்" என்ற நோக்கத்துடன் நேரடியாக இணைகின்றன. ICT யின் பங்கு வெறும் தொழில்நுட்ப கருவியாக அல்ல, சமூக மாற்ற உந்துசக்தியாகும்.

இந்த ஆய்வில் வெளிப்பட்ட ஒரு முக்கியமான உணர்வு, ICT பெண்களின் வாழ்வை "தகவல் சுயநிலையுடன் கூடிய மாற்றம்" நோக்கி முன்னெடுத்துச் செல்கிறது. "நாங்கள் இப்போது யாரையும் காத்திருக்க வேண்டியதில்லை வாடிக்கையாளரை நேராகச் அணுகமுடியும்" என்ற ஒரு பெண்மணியின் கூற்று இதன் அடையாளமாகும். இது Sen (1999) கூறிய capability expansion என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்துகிறது. ICT பெண்களுக்கு தேர்வுச் சுதந்திரம் மற்றும் செயல் திறன் வழங்குகிறது.

அதே நேரத்தில், ICT பயன்பாட்டின் தாக்கம் சமூகத்தின் பன்முக அடுக்குகளில் வேறுபடுகிறது. நகரப் பெண்கள் ICT ஐ வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் கிராமப்புற பெண்கள் அதனைத் தகவல் பெறுவதற்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இது digital divide

ஐ வெளிப்படுத்துகிறது (Tennakoon et al., 2022). யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் ICT பயன்பாடு 58% வரை இருந்தாலும், உட்புற கிராமப்புறங்களிலது 35% க்குள் மட்டுமே உள்ளது. இதனால் ICT வழி உருவாகும் வலுப்படுத்தல் எல்லோருக்கும் சமமாகச் செல்வதில்லை என்பதை காட்டுகிறது.

ஆனால் ICT பயன்பாட்டின் குறைந்த அளவிலும் பெண்களில் உருவாகும் மாற்றம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. சில பெண்கள் ''ICT வழி நமக்கு குரல் கிடைத்தது'' எனக் கூறினர். இதன் பொருள், ICT பெண்களை சமூக உரையாடலின் மையத்திற்குக் கொண்டு வந்துள்ளது. சமூக ஊடகங்கள், வாட்ஸ்அப் குழுக்கள், மற்றும் டிஜிட்டல் வணிக தளங்கள் அவர்களின் குரலை ஒலிக்கச் செய்கின்றன. இது பெண்களின் அரசியல் மற்றும் சமூக பிரதிநிதித்துவத்திற்கான அடித்தளமாக மாறுகிறது.

இவ்வாய்வின் முக்கியமான விளக்கம், ICT யாழ்ப்பாண பெண்களின் வாழ்க்கையில் மில்லேனியம் இலக்கு-3 வலியுறுத்தும் "empowerment through participation" என்ற கோட்பாட்டை நடைமுறையில் வெளிப்படுத்துகிறது என்பதே. ICT பெண்களுக்கு அறிவு, தகவல், மற்றும் வணிக வாய்ப்புகளை வழங்குவதோடு மட்டுமல்ல, அவர்கள் தங்கள் வாழ்க்கை முடிவுகளை தாமே எடுக்கக்கூடிய நம்பிக்கையையும் உருவாக்குகிறது. ICT வழி அவர்கள் சார்ந்து வாழும் நிலை மாறி சுயாதீன மானோர்களாக மாறியுள்ளனர்.

இதனால், யாழ்ப்பாணத்தில் பெண்கள் தொழில்முனைவு வளர்ச்சி ICT ஐ ஒரு தொழில்நுட்ப கருவியாக இல்லாது சமூக விடுதலைக்கான சக்தியாகக் காண்கிறது. அவர்கள் வாழ்வில் ICT என்பது வருமானத்தின் வழி மட்டுமல்ல, மரியாதையின் வழியும் ஆகிறது. ஒரு பெண் பங்கேற்பாளர் கூறினார்:

பெண் தொழில்முனைவர் (வயது 35, யாழ்ப்பாணம்)

> ''என்னை இப்போது எல்லோரும் வணிகக்காரியாக அழைக்கிறார்கள். இது எனக்கு பெருமை தருகிறது.''

இந்த வாக்கியம் ICT வழி பெண்கள் பெற்றுள்ள புதிய அடையாளத்தின் உயிர்ப்பான சான்று ஆகும். மொத்தத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பெண்கள் தொழில்முனைவோர்களின் அனுபவங்கள் ICT வழி நிகழும் சமூக மாற்றத்தை உறுதிப்படுத்துகின்றன. மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு-3 இன் பாலின சமநிலை நோக்குகள் இங்கு வாழ்க்கைச் சான்றுகளாக மாறுகின்றன. ICT பெண்களின் கையில் ஒரு புதிய உலகத்தின் திறவுகோலாக மாறியுள்ளது. அதில் அறிவு, பொருளாதாரச் சுயநிலை, மற்றும் சமூக அங்கீகாரம் ஒன்றாகச் சேர்கின்றன. இதன் மூலம் யாழ்ப்பாண பெண்கள், ''தகவல் வழி விடுதலையின் குரலாக'' திகழ்கின்றனர்.

அரை கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 25 பெண்கள் வெளிப்படுத்திய முக்கிய கருத்து, ICT அவர்கள் வாழ்க்கையின் ''துணை கருவி'' அல்ல ''மாற்றத்தின் வழி'' எனும் உணர்வாகும். டிஜிட்டல் அணுகல் (Digital Access), தன்னம்பிக்கை (Self-confidence), சமூக வலிமை (Social Empowerment), மற்றும் பாலின தடைகள் (Gender Barriers) என்ற அடிப்படைகளில் நோக்கப்படலாம்.

''டிஜிட்டல் அணுகல்'' ICT பயன்பாட்டின் அடிப்படை வாய்ப்புகளை பிரதிபலிக்கிறது. பல பெண்கள் இணையம் மற்றும் மொபைல் போன் வழியாக வணிக வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். ஆனால் சிலர் இணைய வசதியின் குறைபாடு மற்றும் சாதனப் பற்றாக்குறை காரணமாக பின்னடைவைச் சந்தித்தனர். ''தன்னம்பிக்கை'' என்ற அடிப்படையில் நோக்கினால் ICT வழி

பெண்களின் உளவியல் மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. பலர் தங்கள் வணிக முடிவுகளை தாமே எடுக்கத் தொடங்கியுள்ளனர். ''நான் முடிவு செய்ய முடியும்'' என்ற உணர்வு உருவாகியுள்ளது. ''சமூக வலிமை'' என்ற அடிப்படையில் பெண்கள் ICT வழி ஒருவருக்கொருவர் ஆதரவு அளித்து, சமூக வலைப்பின்னல்கள் வழி புதிய ஒற்றுமையை உருவாக்குகின்றனர் என்பதைக் காட்டுகிறது. ஆனால் ''பாலின தடைகள்'' இன்னும் ICT பயன்பாட்டை கட்டுப்படுத்துகின்றன. சில குடும்பங்களில் பெண்களின் இணையப் பயன்பாடு இன்னும் சந்தேகத்துடன் பார்க்கப்படுகிறது.

இத்தகவல்கள் MDG 3 இன் அடிப்படை நோக்கத்துடன் நேரடியாக இணைகின்றன. மில்லேனியம் அபிவிருத்தி இலக்கின் படி, பெண்களின் வலுப்படுத்தல் சமூக சமத்துவம், கல்வி, மற்றும் பொருளாதார பங்கு வழி நிகழ வேண்டும் (UNDP, 2005). இவ்வாய்வில் ICT அந்த சமத்துவத்தை நிகழ்த்தும் கருவியாகச் செயல்படுகிறது. வட இலங்கையின் சமூகத்தில் ICT வழி பெண்கள் ''முடிவெடுக்கும் பங்கேற்பாளர்களாக'' மாறுகின்றனர். இது Empowerment through Participation என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்துகிறது (Kabeer, 1999).

அரசாங்க அறிக்கைகள் வழியாகவும் இதே போக்கு உறுதிப்படுத்தப்படுகிறது. ICTA Sri Lanka (2022) அறிக்கை குறிப்பிடுவது போல, வட மாகாணத்தில் பெண்கள் தொழில்முனைவோரில் ICT பயன்பாடு 45% வரை அதிகரித்துள்ளது. ஆனால் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு பற்றாக்குறை இன்னும் காணப்படுகிறது. Ministry of Women's Affairs (2022) அறிக்கை, ''ICT பயிற்சி பெற்ற பெண்கள், ICT பயிற்சி பெறாத பெண்களைவிட 30% அதிக வாய்ப்புகளைப் பெறுகின்றனர்'' எனக் குறிப்பிடுகிறது. ஆனால் இவை புள்ளிவிவர அளவுகள் மட்டுமே உண்மையான மாற்றம் அவர்களின் குரல்களில், அனுபவங்களில், மற்றும் நம்பிக்கையில் பிரதிபலிக்கிறது.

சில பெண்கள் ICT பயிற்சி முகாம்களில் கலந்து கொள்ளும் நிகழ்வுகளைப் பார்த்தபோது, அவர்கள் ஒன்றிணைந்து தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்ளும் ஆர்வம் மற்றும் மகிழ்ச்சி வெளிப்பட்டது. ஒரு பெண் பங்கேற்பாளர் கூறினார்: ''இது நமக்கு புதிய உலகம் முன்னால் நாங்கள் கேட்பவர்களாக இருந்தோம், இப்போது நாங்களே கற்றுக்கொடுக்கிறோம்.'' இது வலுப்படுத்தலின் உண்மையான அடையாளமாகக் கொள்ளலாம்.

வட இலங்கையில் ICT வழி உருவாகும் பெண்கள் வலுப்படுத்தல், மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகள் வலியுறுத்தும் gender-inclusive development என்ற கருத்தின் நடைமுறை வெளிப்பாடாகப் பார்க்கலாம்.

ICT வழி உருவாகும் மாற்றம் எண்ணிக்கைகளில் மட்டுமல்ல, பெண்களின் குரல், தன்னம்பிக்கை, மற்றும் சமூக அங்கீகாரத்தில் வெளிப்படுகிறது. மில்லேனியம் இலக்கு-3 இன் அடிப்படை நோக்கத்துடன் இணைந்து, இவ்வாய்வு வட இலங்கையின் பெண்கள் தொழில்முனைவோர்கள் ''தகவல் வழி சுயநிறைவு அடையும் தலைமுறை'' என்று ஒரு புதிய அடையாளத்தைப் பெறுகின்றனர்.

## 4. முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

ICT என்பது பெண்களுக்கு வெறும் தொழில்நுட்ப கருவியாக அல்லாது ஒரு சமூக பொருளாதார விடுதலைச் சக்தியாக விளங்குகிறது என்பதைக் காட்டுகின்றன. தகவல், அறிவு, மற்றும் தொடர்பாடல் என்ற மூன்று கூறுகளும் இணைந்து, பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதோடு, அவர்களின் சமூக குரலையும் வலுப்படுத்துகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பெண்கள் தொழில்முனைவோரின் அனுபவங்கள், ICT பயன்பாடு அவர்களை தன்னம்பிக்கைமிக்க மற்றும் சுயநிலைமிக்கவர்களாக மாற்றியதைக் காட்டுகின்றன. வீட்டுக்குள் மட்டும் இயங்கிய பெண்கள், இப்போது Facebook, WhatsApp, Instagram போன்ற சமூக ஊடகங்கள் வழியாக உலக சந்தையில் பங்கேற்கின்றனர். இது பெண்களை "பயனாளி" நிலையிலிருந்து "உற்பத்தியாளர்" நிலைக்கு முன்னேற்றுகிறது. அவர்களின் குரல், வணிகம், மற்றும் சமூக அங்கீகாரம் ஆகியவை ICT வழி ஒருங்கிணைகின்றன. இதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தாமே வடிவமைக்கும் திறனைப் பெறுகின்றனர்.

எனவே இரண்டாம்நிலைத் தரவுகளும் பண்பியல் தரவுகளும் பெண்கள் ICT அறிவால் தமது வாழ்க்கையை தாமே வலுப்படுத்துகின்றனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ICT பெண்களின் வாழ்க்கையில் மூன்று முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது: வருமான உயர்வு, சமூக பங்கு அதிகரிப்பு, மற்றும் தன்னம்பிக்கை வளர்ச்சி. இம்மூன்று கூறுகளும் வலுப்படுத்தலின் அடிப்படை கூறுகளாகும் (Kabe er, 1999). ICT வழி பெண்கள் வணிக முடிவுகளில் பங்கேற்பது மட்டுமல்ல, குடும்ப முடிவுகளிலும் தங்களது குரலை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர். இது மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு-3 இன் "Empowering Women through Participation" என்ற நோக்கத்துடன் முழுமையாக ஒத்துப்போகிறது (UNDP, 2005).

அதேசமயம், ICT பயன்பாட்டில் உள்ள சவால்களும் வெளிப்படுகின்றன. வட இலங்கையின் கிராமப்புறங்களில் இன்னும் இணைய வசதி குறைவாக உள்ளது மின்சார தடைகள் மற்றும் சாதனக் குறைபாடுகள் ICT பயன்பாட்டை தடுக்கின்றன. மேலும் பெண்களுக்கு உரிய ICT பயிற்சி வாய்ப்புகள் குறைவாக உள்ளன. பல பெண்கள் குடும்பக் கடமைகள் காரணமாக பயிற்சிகளில் பங்கேற்க முடியாமல் போகின்றனர். சமூக மனப்பான்மை, குறிப்பாக Hilbert (2011) அவர்கள் கூறியது போன்று "பெண்களுக்கு அதிக தொழில்நுட்ப அறிவு தேவையில்லை" என்ற பார்வையும் இன்னும் நிலவுகிறது. இதுபோன்ற பிரச்சினைகள் ICT வழி பெண்கள் வலுப்படுத்தலை முழுமையாகக் கொண்டுவருவதில் தடையாகின்றன.

இதனால் இவ்வாய்வு ICT மற்றும் பெண்கள் வலுப்படுத்தல் இடையிலான உறவை புரிந்துகொள்வதோடு மட்டுமல்ல, அரசாங்கம் மற்றும் சமூக அமைப்புகள் எவ்வாறு இதனை வலுப்படுத்த முடியும் என்பதற்கான கொள்கை பரிந்துரைகளையும் வழங்குகிறது. வட இலங்கையின் சமூகச் சூழலைப் பொருத்து ICT அடிப்படையிலான பெண்கள் வலுப்படுத்தல் ஒரு தனித்துவமான அணுகுமுறை தேவைப்படுத்துகிறது. அதாவது "Digital Inclusion with Social Sensitivity."

முதன்முதலில், அரசாங்கம் ICT உள்கட்டமைப்பை (Infrastructure) வலுப்படுத்தல் அவசியமாகும். யாழ்ப்பாணம் மற்றும் வட மாகாணத்தின் கிராமப்புறங்களில் இணைய வசதியை விரிவுபடுத்தல் பெண்களின் வணிக முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவையாகும். National Digital Economy Policy (2020–2030) இன் கீழ், பெண்களுக்கு குறைந்த செலவில் இணைய வசதி மற்றும் மொபைல் சாதனங்கள் வழங்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் "Digital Divide" குறைக்கப்படும் (Tennakoon et al., 2022).

இரண்டாவதாக, பெண்களுக்கு ICT திறன் மேம்பாட்டு (Digital Literacy) பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ICTA (2022) அறிக்கை காட்டுவது போல, பயிற்சி பெற்ற பெண்கள் ICT ஐ வணிகத்திற்காக அதிகம் பயன்படுத்துகின்றனர். எனவே, அரசாங்கம், பல்கலைக்கழகங்கள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து, Women in Digital Economy Centres உருவாக்க வேண்டும். இதில் பெண்களுக்கு e-commerce, e-marketing, digital payment, மற்றும் online safety பற்றிய நடைமுறை பயிற்சிகள் வழங்கப்படலாம்.

மூன்றாவதாக, ICT இல் பாலின அடிப்படையிலான தடைகளை எதிர்கொள்ளும் சமூக விழிப்புணர்வு முயற்சிகள் தேவை. சில சமூகங்களில் பெண்களின் இணையப் பயன்பாடு இன்னும் சந்தேகத்துடன் பார்க்கப்படுகிறது. இது ICT பயன்பாட்டை மனநிலையாகத் தடுக்கிறது. அதனை மாற்றுவதற்கு, "Women and Technology Awareness Campaigns" மூலம் குடும்பங்களிலும் சமூகத்திலும் நேர்மறை பார்வையை உருவாக்க வேண்டும்.

நான்காவதாக, பெண்கள் தொழில்முனைவு வலுப்படுத்தலில் அரசாங்கம், தனியார் துறை மற்றும் சமூக அமைப்புகள் இணைந்த கூட்டாண்மை (Public-Private Partnership) உருவாக்கப்பட வேண்டும். பல நிறுவனங்கள் ICT வழி பெண்களுக்கு சிறு கடன்கள், ஆன்லைன் சந்தை தளங்கள், மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்க முடியும். உதாரணமாக, Women's Bank, Chamber of Commerce, மற்றும் ICTA இணைந்து "Women Digital Entrepreneurship Hub – Jaffna" போன்ற மையங்களை உருவாக்கலாம்.

ஐந்தாவதாக, நிலையான வளர்ச்சி இலக்கு-5 (SDG 5) இன் அடிப்படையில் "Gender-inclusive ICT Policy" உருவாக்கப்பட வேண்டும். இதில் பெண்கள் ICT துறையில் பங்குபெறும் விகிதத்தை உயர்த்தும் இலக்குகள் சேர்க்கப்படலாம். தற்போதைய ICTA Women in Tech திட்டங்கள் வட மாகாணத்துக்குப் பரவுவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் கொள்கை ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

அடுத்ததாக, பெண்கள் ICT பயன்பாட்டின் பாதுகாப்பு மற்றும் சைபர் விழிப்புணர்வை (Cyber Awareness) மேம்படுத்தல் அவசியம். சில பெண்கள் இணையவழி மோசடி அல்லது தவறான தகவல்கள் குறித்து அச்சம் தெரிவித்தனர். இதைத் தடுக்க "Digital Safety for Women" எனும் கல்வித் திட்டங்கள் பள்ளி மற்றும் சமூக நிலைகளில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் ICT ஐ சமூக இணைவு கருவியாகப் பயன்படுத்துவதற்கான தளங்கள் உருவாக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் "Community ICT Hubs for Women" என்ற மையங்கள் அமைக்கப்பட்டால், பெண்கள் ஒருவருக்கொருவர் அனுபவம் பகிர்ந்து கொள்ளவும் புதிய வணிக வாய்ப்புகளை ஆராயவும் முடியும். இது சமூக வலைப்பின்னலின் வலிமையை அதிகரிக்கும்.

இந்த பரிந்துரைகள் மில்லேனியம் இலக்கு-3 இன் "பெண்கள் சமூகத்தில் பங்கேற்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்தல்" என்ற நோக்கத்துடனும், SDG 5 இன் "Achieve gender equality and empower all women and girls" என்ற இலக்குடனும் இணைகின்றன. ICT வழி உருவாகும் பெண்கள் வலுப்படுத்தல், இலங்கை அரசாங்கத்தின் "National Policy on Women (2014)" இல் குறிப்பிடப்பட்டுள்ள economic inclusion and decision-making empowerment குறிக்கோள்களை அடைவதற்கான நடைமுறை வழியாகவும் விளங்குகிறது.

இந்த ஆய்வின் முடிவுகள் தெளிவாகக் கூறுவது, ICT என்பது வட இலங்கையின் பெண்களுக்கு சமூக மீளிணைவுக்கான புதிய வாயிலாக மாறியுள்ளது. போருக்குப் பிறகு யாழ்ப்பாண பெண்கள் ICT வழி தங்கள் வாழ்க்கையை மறுசீரமைத்துள்ளனர். சிலர் சிறு தொழில்முனைவுகளைத் தொடங்கியுள்ளனர். சிலர் டிஜிட்டல் விற்பனைக்குத் திரும்பியுள்ளனர். சிலர் சமூக ஊடகங்களில் அறிவுப் பகிர்வை மேற்கொள்கின்றனர். இவை அனைத்தும் வலுப்படுத்தலின் பல வடிவங்கள்.

ICT வழி உருவாகும் இந்த மாற்றம், வெறும் பொருளாதார விடுதலையாக மட்டுமல்ல, கலாச்சார மற்றும் உளவியல் மாற்றமாகவும் விளங்குகிறது. பெண்கள் தங்கள் குரலை வெளிப்படுத்தும்

தளத்தைப் பெற்றுள்ளனர் அவர்கள் தங்களது அடையாளத்தை மறுசீரமைக்கின்றனர். அவர்கள் இப்போது "தகவல் தொழில்நுட்பத்தின் பயனாளிகள்" அல்ல "தகவல் சமூகத்தின் வடிவமைப்பாளர்கள்." அவர்கள் "Digital Sri Lanka" என்ற தேசிய கனவின் முன்னோடிகளாக மாறுகின்றனர். இதுவே மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளின் உண்மையான நிறைவேற்றமாகும் பெண்களின் கையில் உலகத்தின் மாற்றம்.

**உசாத்துணைகள்**


Agarwal, S. (2018). *ICT and women entrepreneurs in India: Opportunities and challenges*. *Journal of South Asian Studies, 26*(2), 115–128.

Athapaththu, J. C., & Nishantha, B. (2021). Information and communication technology adoption in *SMEs* in Sri Lanka: Current level of ICT usage and perceived barriers. In *Research* anthology on small business strategies for success and survival (pp. 1040–1052). IGI Global.

Castells, M. (2011). The rise of the network society (2nd ed.). John Wiley & Sons.

Charmaz, K. (2006). Constructing Grounded Theory. Sage Publications.

Creswell, J. W. (2013). Qualitative Inquiry and Research Design: Choosing Among Five Approaches (3rd ed.). Sage Publications.

EQUALS Global Partnership. (2021). Gender digital divide report 2021.

Galpaya, H. (2019). Understanding digital access and use in the global south. IDRC / IDL.

Galpaya, H. (2022). Gender and digital access gaps and barriers in Asia. UN Women.

Guest, G., Bunce, A., & Johnson, L. (2006). How many interviews are enough? An experiment with data saturation and variability. Field Methods, 18(1), 59–82.

Hafkin, N., & Taggart, N. (2001). Gender, information technology and developing countries. Academy for Educational Development.

Hilbert, M. (2011). Digital gender divide or technologically empowered women in developing countries? A typical case of lies, damned lies, and statistics. Women's Studies International Forum, 34(6), 479–489.

Huyer, S., & Hafkin, N. (2007). Engendering the knowledge society: Measuring women's participation. Orbicom–UNESCO.

ICTA Sri Lanka. (2022). Women in digital economy report.

Jaffna Chamber of Commerce. (2023). Entrepreneurship development in Northern Province.

Kabeer, N. (1999). Resources, agency, achievements: Reflections on the measurement of women's empowerment. Development and Change, 30(3), 435–464.

LIRNEasia. (2020, March). Poor digital awareness and skills are a barrier to internet use in Sri Lanka: Policy brief.

OECD. (2019). Trends shaping education 2019. OECD Publishing. https://doi.org/10.1787/trends_edu-2019-en

Rahma, A., Ahmed, M. T., Masud, M. B., & Jahan, N. (2025). Key factors influencing women's economic empowerment in rural Bangladesh: Insights and implications for development policy.

Sen, A. (1999). Development as freedom. Oxford University Press.

Shaw, T. M., & Heard, K. A. (Eds.). The politics of Africa: Dependence and development.

Silva, K. T., Razaak, M. G. M., Herath, D., & Usoof-Thowfeek, R. (2018). Post-war livelihood trends in northern and eastern Sri Lanka.

Tennakoon, T. M. A., Gunawardana, K. D., & Premaratne, S. P. (2022). Gender inequality in digital transformation: Evidence from business process management industry in Sri Lanka. International Journal of Governance and Public Policy Analysis, 4(1).

UNDP. (2005). Millennium development goals report.

UNDP. (2020). Digital transformation and women's economic empowerment.

UN Women. (2021). Women in digital economy: Bridging the gender gap.

United Nations. (2015). Sustainable development goals report.

Wanigasinghe, L. (2023, March 8). DigitALL: Are Sri Lankan women abandoned in digital transformation? IPS – Talking Economics / Southern Voice.

World Bank. (2021). Women and ICT in South Asia.

World Economic Forum. (2022). Global gender gap report 2022.